




# வாஷிங்டனில் பன்னாட்டுப் புறநானூற்று மாநாடு

ஆகஸ்ட் 16,2013 IST Comments




View More Photo

வாஷிங்டன்: புறநானூற்றுக் கருத்துக்களை வட அமெரிக்காவில் உள்ள தமிழ் மக்களிடமும், இளைஞர்களிடமும், மற்றவர்களிடமும் அறிமுகப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு "புறநானூறு" என்ற தலைப்பில் ஒரு பன்னாட்டு மாநாடு நடத்த ஏற்பாடு செய்துள்ளனர். ஆகஸ்ட் 31ம் தேதி மற்றும் செப்டம்பர் 1ம் தேதி இது நடைபெற உள்ளது.

வாஷிங்டன் வட்டாரத்தில் வாழும் தமிழர்கள் 2003ம் ஆண்டு தமிழ் இலக்கிய ஆய்வுக் கூட்டம் என்ற அமைப்பை உருவாக்கி அதன் அடிப்படையில் தமிழ் இலக்கியத்தைத் தொடர்ந்து படித்து வருகிறார்கள். இவர்கள் 2003ம் ஆண்டு முதல் 2008ம் ஆண்டுவரை, திருக்குறளை முறையாகப் படித்தனர். 2005ம் ஆண்டு வாஷிங்டன் வட்டாரத்தில் பன்னாட்டுத் திருக்குறள் மாநாட்டை நடத்தினர். அமெரிக்கத் தலைநகரத்தில் திருவள்ளுவருக்கு ஒரு சிலையையும் நிறுவினர். திருக்குறள் படித்து முடித்ததும் புறநானூறு படிக்கத் தொடங்கினர். படிப்பதற்குப் புறநானூறு சற்று கடினமாக இருந்தாலும், நவில்தொறும் நவில்தொறும் அதன் அருமையும் பெருமையும் வாஷிங்டன் வட்டாரத்


Advertisement

தமிழர்களை மிகவும் கவர்ந்தன.

அவர்களின் உள்ளத்தைக் கவர்ந்து, சிந்தனையைத் தூண்டிய இந்தச் சிறப்பான நூலைப் பிறரும் படித்துப் பயன்பெறவெண்டும், புறநானூற்றுக் கருத்துக்களை வட அமெரிக்காவில் உள்ள தமிழ் மக்களிடமும், இளைஞர்களிடமும், மற்றவர்களிடமும் அறிமுகப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு "புறநானூறு" என்ற தலைப்பில் ஒரு பன்னாட்டு மாநாடு நடத்த ஏற்பாடு செய்துள்ளனர். இந்த மாநாடு, வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கமும், வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும் இணைந்து நடத்தும் மாநாடு. ஆகஸ்ட் 31ம் தேதி மற்றும் செப்டம்பர் 1ம் தேதி சில்வர் ஸ்பிரிங் பகுதியில் உள்ள மோன்ட்கோமரி கல்லூரி கலாச்சார கலை மையத்தில் நடைபெற உள்ள இந்த மாநாட்டில் அறிஞர்களின் சொற்பொழிவுகளும், மாணவர்களுக்கான புறநானூறு தொடர்பான போட்டிகளும், "முத்தமிழ் முழக்கம்" என்ற புறநானூறு சார்ந்த நாட்டிய நாடக நிகழ்ச்சியும், "சிவகாமியின் சபதம்" வரலாற்று நாடகமும் நடைபெறவிருக்கின்றன.

புறநானூற்றின் பெருமையை உலகறியச் செய்யும் நோக்கத்தோடு ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாநாடு, உலக வரலாற்றிலேயே மேலைநாடுகளில் நடைபெறும் புறநானூறு சார்பான முதல் பன்னாட்டு மாநாடு. மேலதிக விவரங்களுக்கு www.classicaltamil.org என்ற இணையதளததைப் பாருங்கள்.

- தினமலர் வாசகர் ஜான் பெனடிக்

Like 9 Send Tweet 0 SHARE

## மேலும் அமெரிக்கா செய்திகள்

கனடாவில் வரலட்சுமி விரதம்

நியூஜெர்சியில் ஆடிக்கிருத்திகை விழா

மின்னசோட்டாவில் சுதந்திர தினம்

நியூயார்க் அஞ்சப்பர் உணவகத்தில் இந்திய சுதந்திர தின இசை நிகழ்ச்சி

மிச்சிகனில் மங்களாசரண் நிகழ்ச்சி

தான்சானியாவில் ஹயக்ரீவர் ஹோமம்

ஆராதனை மகோற்சவம்

சிங்கப்பூரில் இலக்கியச் சோலை



Advertisement

சர்வதேச நகரங்களின் நேரம்




இன்றைய முக்கிய செய்திகள் மேலும்